வடமாகாணக் கல்வித்திணைக்களம்
மாதிரி வினாத்தாள்

21-பொருளியல்
புள்ளியிடும் திட்டம்







வடமாகாணக் கல்வித்திணைக்களம்
பொருளியல் மாதிரி வினாத்தாள்-2017
May

வடமாகாணக் கல்வித்திணைக்களம்

மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை ,2017 வைகாசி
General Certificate of Education (Adv. Level) Examination ,May2017

பொருளியல் I
Economics I

21 | T | I

புள்ளியிடும் திட்டம்

வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல
1.	4	11.	3	21.	2	31.	2	41.	3
2.	5	12.	3	22.	2	32.	3	42.	3
3.	3	13.	2	23.	4	33.	2	43.	3
4.	5	14.	4	24.	3	34.	5	44.	5
5.	5	15.	3	25.	4	35.	2	45.	4
6.	4	16.	2	26.	3	36.	1	46.	1
7.	3	17.	2	27.	2	37.	2	47.	1
8.	2	18.	4	28.	3	38.	3	48.	1
9.	4	19.	4	29.	5	39.	4	49.	3
10.	1	20.	5	30.	3	40.	2	50.	3

விசேட அறிவுறுத்தல் : ஒரு சரியான விடைக்கு புள்ளி 2 வீதம் 50

மொத்தப் புள்ளிகள் **2 X 50 =100**

17.05.2017 **வடமாகாணக் கல்வித் திணைக்களம்**

AL/2017/21/T-II

வடமாகாணக் கல்வித்திணைக்களம்

மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை ,2017 வைகாசி

General Certificate of Education (Adv. Level) Examination ,May2017

பொருளியல் II
Economics II

21 | T | II

புள்ளியிடும் திட்டம்

அறிவுறுத்தல்கள்:

* உப பிரிவு **அ** விலிருந்து இரண்டு வினாக்களுக்கும் **ஆ** விலிருந்து இரண்டு வினாக்களும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

உப பிரிவு (அ)

1. 1. **அமையச்செலவு தோற்றம் பெறுவதற்கு அருமை மட்டும் போதுமான நிபந்தனை இல்லை இக் கூற்றினை விளக்குக?** (4புள்ளிகள்)

மாற்றுத் தெரிவுகள் உள்ள நிலையில் குறித்தவொரு தெரிவினை மேற்கொள்ளும் போது அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் இழப்பின் பெறுமதி அத்தெரிவிற்கான அமையச் செலவாகும். 1புள்ளி

அமையச் செலவு ஏற்படுவதற்றான காரணங்களில்பின்வரும் இரண்டும் முக்கியம் பெறும்.

* வரையறுக்கப்படாத மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய சமூகத்திடமுள்ள வளங்கள் (வளத்திரட்சி) ஒப்பீட்டு ரீதியில் கிடைக்கப் பெறாமை (அருமை)
* வளங்கள் மாற்றுப்பயன்பாட்டைக் கொண்டிருத்தல். 1புள்ளி

வளங்கள் அருமையாகக் காணப்படினும் மாற்றுப் பயன்பாட்டைக்கொண்டிராவிடின் அங்கு தெரிவுகள் தோற்றம் பெறாது எனவே அமையச் செலவு தோற்றம் பெறாது.

அருமை ➔ மாற்றுப்பயன்பாடு ➔தெரிவு ➔ அமையச்செலவு 1புள்ளி

எனவே அமையச் செலவு தோற்றம் பெற வேண்டுமாயின் அருமை மட்டும் போதுமான நிபந்தனை அல்ல அருமையான வளங்கள் மாற்றுப்பயன்பாட்டைக் கொண்டிருக்கும் போது அவ் மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையில் சிறந்ததொரு பயன்பாட்டைப் பூர்த்தி செய்ய முற்படும் போதே அமையச் செலவு தோற்றம் பெறும். 1புள்ளி

2. **பொருளாதார வளங்கள் என்றால் என்ன? இவற்றின் வினைத்திறனை அதிகரிக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

அமையச்செலவோன்றை ஏற்றுப் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் அருமையானதும் மாற்றுப்பயன்பாடுடையதுமான வளங்கள் பொருளாதார வளங்கள் ஆகும்.

இவை மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான அளவைவிடக் குறைவாகக் கிடைப்பதால் உற்பத்தியின் போது அமையச் செலவை ஏற்கின்ற வளங்களாகக் காணப்படுகின்றன. 2புள்ளிகள்

இவற்றின் வினைத்திறனைப் பின்வருமாறு அதிகரிக்கலாம்.

*. நிலையான மூலதனத்தை விருத்தி செய்ய முதலீடுகளை மேற்கொள்ளல்
* புதிய தொழில்நுட்ப உள்வாங்கல்களை மேற்கொள்ளல்
* ஊழியத்திற்குப் பயிற்சிகள்,கல்வி வசதியூட்டல்
* மனித மூலதனத்தின் மீதான முதலீடுகளை அதிகரித்தல்
* ஊக்குவிப்புக்களை வழங்கல்
* சிறந்த தொழில் உறவுகளைப் பேணல்

(4X1/2 = 2புள்ளிகள்)

3. **உழைப்பு மற்றும் மனிதமூலதனம் ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக**

(4புள்ளிகள்)

பொருள்கள் சேவைகளின் உற்பத்திக்கென்று மனிதனால் வழங்கப்படும் உடல்,உளரீதியான முயற்சிக்காரணி உழைப்பு ஆகும். 1புள்ளி

மனித மூலதனம் என்பது தனிநபர்,வேலையாட்கள் கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாகப் பெற்ற அறிவு,திறன்கள் மற்றும் பயிற்சியின் தனிப்பட்ட மற்றும் சமூக ஆளுமையின் ஒட்டுமொத்தமாகும். 1புள்ளி

மனித மூலதனமானது உழைப்பினதும் மூலதனத்தினதும் பண்பினைக் கொண்டது,இருப்பினும் உழைப்பிலிருந்து வேறுபட்டது.மனித மூலதனத்தை விருத்தி செய்வதன் ஊடாகப்பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனை அதிகளவில் மேம்படுத்த முடியும் ,மனித மூலதனம் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு அவசியமானதொரு மூலதமாகும். 1புள்ளி

அனைத்து உழைப்பாளர்களையும் மனித மூலதனமாகக் கருதமுடியாது உழைப்பாளர்களிடையே காணப்படும் அறிவு,திறன்,தனிப்பட்ட,சமூக ஆளுமைகளின் கூட்டாக மனித மூலதனம் காணப்படு கின்றது. எனவே உழைப்பிலிருந்து வேறுபட்டது. 1புள்ளி

4. **உற்பத்திசாத்தியவளையியைப் பயன்படுத்தி விளக்கக் கூடிய சிற்றினப்பொருளாதார பிரயோகங்கள், பேரினப்பொருளாதாரப் பிரயோகங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு குறித்துக் காட்டுக?** (4புள்ளிகள்)

சிற்றினப் பொருளாதாரப் பிரயோகங்கள்

* அருமைப்பிரச்சினை
* பொருள்களின் பல்வேறு சேர்க்கைகளைத் தெரிவு செய்தல்.
* அமையச்செலவும் தெரிவும்.
* தொழில்நுட்ப மாற்றத்தின் விளைவுகள் (2 X 1/2 = 1புள்ளி)

இவற்றுள் ஏதாவது ஒன்றைச் உற்பத்தி சாத்திய வளையியில் குறித்துக்காட்டியிருப்பின் 1புள்ளி

(மொத்தம் 2புள்ளிகள்)

பேரினப் பொருளாதாரப் பிரயோகங்கள்

* பொருளாதார வளர்ச்சி
* நிறைதொழில் மட்டம் மற்றும் குறைதொழில் மட்டம்
* பொருளாதாரப் பின்னடைவு மற்றும் பொருளாதார வீழ்ச்சி
* பொருளாதாரத் தடைகளின் விளைவுகள் (2 X 1/2 = 1புள்ளி)

இவற்றுள் ஏதாவது ஒன்றைச் உற்பத்தி சாத்திய வளையியில் குறித்துக்காட்டியிருப்பின் 1புள்ளி

(மொத்தம் 2புள்ளிகள்)

5.(அ) **பொருளாதார முறைமைகளை வகைப்படுத்த உதவும் அடிப்படை நியதிகள் எவையெனக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

- அடிப்படைப் பொருளாதாரப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறிமுறை
- காணப்படும் சொத்துரிமை
- பொருளாதாரங்களில் காணப்படும் ஊக்குவிப்பு வடிவங்கள் / ஊக்குவிப்பின் தன்மை

(ஏதாவது இரண்டு இருப்பின் 2புள்ளிகள்)

(ஆ) **பொருளாதார முறைமைகளின் செயலாற்றுகையை மதிப்பிட உதவும் தகுதிகாண் நியதிகள் (criteria)சிலவற்றைக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

* பூரண வேலையாய்ப்பு / நிறைதொழில் மட்டம்
* பொருளாதார வினைத்திறன்
* பொருளாதார வளர்ச்சி
* பேரினப் பொருளாதார உறுதி(உள்ளக உறுதி ,வெளியா உறுதி)
* பொருளாதாரச் சமத்துவம் (நியாயத்துவம்)
* சுற்றாடல் தராதரம் / சூமல் தரம் மற்றும் சூழற்பாதுகாப்பு
* பொருளாதாரச் சுதந்திரம். (4 X 1/2 = 2புள்ளிகள்)

2. 1.(அ).**விலைமாற்றத்தின் வருமான விளைவு பதிலீட்டு விளையின் தேறியவிளைவு எதிர்கணியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் எவ்வாறு அழைக்கப்படும்? இத்தகைய தன்மையுடைய பண்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

புறநடைக் கேள்வி (1புள்ளி)

* கிபன் பண்டம்
* காட்சிப்பண்டங்கள்
* செலுத்தும் விலை அடிப்படையில் தரம் நிர்ணயிக்கப்படும் பண்டங்கள் (2 X 1/2 = 1புள்ளி)

* கிபன் பண்டம் * காட்சிப்பண்டங்கள் இரண்டுமே முக்கியமான விடைகள் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தவும்

(ஆ)**விலைமாற்றத்தின் வருமான விளைவு என்பதனை விளக்குக?** (2புள்ளிகள்)

குறித்த காலப்பகுதியில் நுகர்வோன் வருமானம் உள்ளடங்கலான ஏனைய காரணிகள் மாறாத போது குறித்த பண்டத்தின் விலை மாற்றமடைவதால் நுகர்வோர் மெய்வருமானத்தில் ஏற்படுகின்ற மாற்றம் காரணமாகக் குறித்த பண்டத்தின் கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றம் விலைமாற்றத்தின் வருமான விளைவு ஆகும். (2புள்ளிகள்)

2. (i) **பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எத்தகைய விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றன என்பதனைக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

(அ) ஏனையவை மாறாத போது குறித்த பண்டத்தின் விலை அதிகரித்த போது நுகர்வோன் செலவு அதிகரித்தது. – நெகிழ்வற்ற கேள்வி (1புள்ளி)

(ஆ) நிலவுகின்ற சந்தை விலையில் நிறுவனத்தின் மொத்த வருமானம் உச்சப்படுத்தப்பட்டுள்ளது. அலகு / ஒன்றுக்குச் சமமான கேள்வி நெகிழ்ச்சி (1புள்ளி)

(ii) **பண்டத்திற்குப் பண்டம் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி வேறுபடுவது ஏன்?** (2புள்ளிகள்)

* பொருட்களை பிரதியீடு செய்யக்கூடியளவுக்கு கிடைக்கும் தன்மை
* நுகர்வோன் வரவு செலவில் பொருளின் சார்பு ரீதியான முக்கியத்துவம்.
* குறிப்பிட்ட ஒரு பொருளின் பல்வேறு பயன்பாடுகள்
* கேள்வி மாற்றமடைவதற்குரிய காலப்பகுதி

* பொருள்களை வரையறுக்கும் முறை /வரைவிலக்கணப்படுத்தும் முறை (2X1=2புள்ளிகள்)

3. **நிரம்பல் விதி என்பதனை விளக்கி அது தொழிற்படுவதற்கான பிரதான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

குறித்த காலப்பகுதீயில் ஏனையவை மாறாத போது குறித்த பண்டத்தின் விலைக்கும் அதன் நிரம்பல் தொகைக்குமிடையில் நேர்த் தொடர்பு காணப்படும் என்பதை விளக்குவதே நிரம்பல் விதி ஆகும். (1புள்ளி)

அதாவது குறித்த காலப்பகுதியில் ஏனையவை மாறாத போது குறித்த பண்டத்தின் விலை அதிகரித்தால் அதன் நிரம்பல் தொகை அதிகரிக்கும் மாறாக விலை குறைவடைந்தால் நிரம்பல் தொகை குறைவடையும் எனக் குறிப்பிடுவதே நிரம்பல் விதி ஆகும். (1புள்ளி)

நிரம்பல் விதி தொழிற்படுவதற்கான காரணங்கள்

* அதிகரிக்கும் அமையச்செலவு / அதிகரிக்கும் எல்லைச் செலவுகள் நடைமுறையில் காணப்படல்.
* விலையினூடாகக் கிடைக்கப்பெறும் இலாபங்கள் , அதிக விலைகள் அதிக இலாபத்தை ஈட்டித்தரும் என்ற நம்பிக்கை. (2X1=2புள்ளிகள்)

4. **ஆகக் குறைந்த கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படுவதன் காரணமாகச் சந்தையில் ஏற்படக் கூடிய விளைவுகளைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

* மிகை நிரம்பல் ஏற்படும்
* ஊழியச் சந்தையில் குறைந்தபட்ச விலை விதிப்பதால் வேலையின்மை உருவாகும்.
* குறைந்த பட்ச விலையைப் பெயரளவு விலையாக வைத்துக் கொண்டு கழிவுகளை வழங்கி கொள்வனவாளர்களுக்குப் பொருள்களை நிரம்பல் செய்ய நேரிடல்.
* மிகைமுதலீட்டு நிலையொன்று ஏற்படல் (4X1=4புள்ளிகள்)

5. குறித்தபண்டத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு

$Qd = 8000-100p$

$Qs = -1000 +200p$

குறித்தளவு அலகு வரி விதிக்கப்பட்ட பின்னர் நிரம்பல் சமன்பாடு $Qs_T = -1600 +200p$ ஆகக் காணப்படட்டது.

அ. அரசு விதித்த அலகு வரியாது? (2புள்ளிகள்)

$$Qst = a+b(p-t)$$

$$-1600 +200p = -1000 +200 (p-t)$$ (1புள்ளி)

$$-1600+200p = -1000+200p - 200t$$

$$600 = 200t$$

$t = 3$ரூபா அலகு வரி 3ரூபா (1புள்ளி)

ஆ. அலகு வரி விதிப்பினால் ஏற்பட்ட மீளமுடியாச் சமூக நலன் இழப்பு யாது? (2புள்ளிகள்)

வரிக்கு முன் சமநிலைத் தொகை 5000 அலகுகள்

வரிக்குப் பின் சமநிலைத் தொகை 4800 அலகுகள்

கணக்குகளுக்கு மாணவர்கள் பொருத்தமான வேறு முறைகளிலும் கணிப்பிட்டிருப்பின்புள்ளி வழங்கவும்

அலகு வரி விதிப்பினால் ஏற்பட்ட மீளமுடியாச் சமூக நலன் இழப்பு = ½ X சமநிலைத்தொகையில் ஏற்பட்ட மாற்றம் X அலகு வரி (1புள்ளி)

$$= \frac{1}{2} \times (5000-4800) \times 3$$

= 300 ரூபா (1புள்ளி)

3. 1. **குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பதனை விளக்கி அதனுடன் தொடர்புடைய எடுகோள்களைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

பொறித் தொகுதியின் அளவும் தொழில்நுட்பமும் தரப்படும் இடத்து மாறும் உள்ளீட்டைத் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது மாறும் உள்ளீட்டின் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் ஒரு எல்லைக்கு அப்பால் படிப்படியாகக் குறைவடையும் என விளக்குவது

அல்லது

உற்பத்தி நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் நிலையான உள்ளீட்டை மாற்றாது வைத்துக் கொண்டு மாறும் உள்ளீட்டை மாத்திரம் அதிகரிக்கும் போது மாறும் உள்ளீட்டின் எல்லை உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி குறித்த எல்லைக்கு அப்பால் குறைவடைந்து செல்லும் என்பதை விளக்குவதாகும். (2புள்ளிகள்)

எடுகோள்கள்

*. சகல உள்ளீடுகளும் ஓரினத்தன்மை வாய்ந்தவை

*. தொழில்நுட்பம் மாறாது

*. ஒரு காரணி மட்டும் நிலையான காரணியாகவும் மற்றைய அனைத்துக் காரணியும் மாறும் காரணியாகும்.

* காலம் குறுங்காலம் (4 X ½ = 2புள்ளிகள்)

2. **உற்பத்திச் செலவு, நேர்ச்செலவு, மறைமுகச்செலவு, ஆழ்செலவு ஆகியவற்றை விளக்குக?** (4புள்ளிகள்)

* குறித்த உற்பத்திச் செயற்பாட்டிற்காக இழக்கப்படுகின்ற எல்லாப் பொருளாதார வளங்களினதும் அமையச் செலவுகளும் உற்பத்திச் செலவாகும் (1புள்ளி)
* உற்பத்திச் செயற்காட்டிற்காக நிறுவனம் வெளியில் இருந்து பெற்றுக் கொண்ட உற்பத்திக்காரணியால் இழக்கப்பட்ட அமையச்செலவின் பணப் பெறுமதி நேர்ச்செலவாகும் (1புள்ளி)
* உற்பத்தி நிறுவனம் / உற்பத்தியாளனுக்குச் சொந்தமான உற்பத்தி வளங்களை உற்பத்திச் செயற்பா ட்டில் பயன்படுத்துவதால் இழக்கப்படுகின்ற உத்தம காரணி வருமானத்தின் பெறுமதி மறைமுகச் செலவாகும் (1புள்ளி)
* கடந்த காலத்தில் செய்யப்பட்ட செலவொன்றை நிகழ்காலத்தில் மீளப் பெறமுடியாவிட்டால் அத்தகைய செலவு ஆழ்ந்த செலவு ஆகும். (1புள்ளி)

3. **சாதாரண இலாபம் என்றால் என்ன? இது உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கருதப்படுமா? விளக்குக?** (4புள்ளிகள்)

முயற்சியாளன் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்று உற்பத்திச் செயற்பாட்டை நடாத்துவதற்காக எதிர்பார்க்கும் குறைந்தபட்ச வெகுமதி சாதாரண இலாபம் ஆகும். (1புள்ளி)

இது மொத்த வருமானம்(TR) மொத்தச் செலவு(TC)க்குச் சமப்படும் போது உழைக்கப்படுவதாகும். (1புள்ளி)

சாராதண இலாபம் உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கருதப்படும் (1புள்ளி)

முயற்சியாளன் என்ற உற்பத்திக்காரணியின் அமையச்செலவே சாதாரண இலாபம் ஆகும். எனவேதான் இது ஒரு மறைமுக/நேரில் செலவாக கருதப்பட்டு உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கருதப்படு கின்றது. (1புள்ளி)

4. **சிலருரிமைச் சந்தையினைத் தனியுரிமைப் போட்டிச் சந்தையிலிருந்து வேறுபடுத்துக?** (3புள்ளிகள்)

சிலருரிமைச் சந்தை	தனியுரிமைப் போட்டிச் சந்தை
சந்தையில் சில பெரிய நிறுவனங்கள் முதன்மை பெற்றிருக்கும்	சந்தையில் அதிக எண்ணிக்கையிலான சிறிய நிறுவனங்கள் காணப்படும்

பொருள்கள் ஓரினத்தன்மை வாய்ந்ததாகவோ அல்லது வேறாக்கம் செய்யப்பட்டதாகவோ இருக்கும்.	ஓவ்வொரு நிறுவனமும் வேறாக்கம் செய்யப்பட்ட வித்தியாசமான பொருள்களைக் கொண்டிருக்கும்.
நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றிலோன்று தங்கியிருக்கும்	நிறுவனங்கள் ஒன்றிலோன்று தங்கியிருக்கும் உணர்வில்லை
பல்வேறு பிரவேசத் தடைகள் உண்டு	பிரவேச சுதநதிரம் உண்டு
நிறுவனங்கள் இணக்கப்பாட்டு ஒப்பந்தங்களை அடிக்கடி மேற்கொள்ளும்.	நிறுவனங்கள் தனித்தனியே சுயாதினமாக இயங்கும்

(3 X1=3புள்ளிகள்)

5. **நிறைபோட்டி நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டத்தை தீர்மானிக்கும் இரு முறைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக?** (5புள்ளிகள்)

* எல்லை வருமானம் ,எல்லைச் செலவு முறை
* மொத்த வருமானம் ,மொத்தச் செலவு முறை (1புள்ளி)

எல்லை வருமானம் ,எல்லைச் செலவு முறை இம்முறையின் கீழ் பின்வரும் இரண்டு நிபந்தனைகள் ஒருங்கே பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

- எல்லை வருமானம் ,எல்லைச் செலவுக்குச் சமனாகக் காணப்படவேண்டும்.
- எல்லைச் செலவுக் கோடு கீழிருந்து மேல் நோக்கிச்செல்லும் போது எல்லை வருமானக் கோட்டை வெட்டிச் செல்லுதல் வேண்டும். (1புள்ளி)



இங்கு Bப்புள்ளி யில் உள்ள Q_3 வெளியீட்டு மட்டமே இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டமாகும்.

(1புள்ளி)

* மொத்த வருமானம் ,மொத்தச் செலவு முறை

இங்கு மொத்த செலவினைக் காட்டிலும் மொத்த வருமானம் அதிகமாகக் காணப்படும் நேர்கணியப் பிரதேசப் பகுதியில் உள்ள இடைவெளி உச்சமாகவுள்ள வெளியீட்டு மட்டத்தை தெரிவு செய்வதாகும். (1புள்ளி)



இங்கு Q_3 வெளியீட்டு மட்டமே இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டமாகும். (1புள்ளி)

4. 1. **பொருளாதாரப்பரப்பொன்றில் செயற்படும் நிறுவன அலகுகளைக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

*.நிதி நிறுவனமல்லாக் கூட்டுஸ்தாபனங்கள்

*. நிதிக் கூட்டுஸ்தாபனங்கள்

*. அரசாங்கத்துறை

*. வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

*. குடும்ப(வீட்டுத்துறை) அலகுகள் (4X1/2 = 2புள்ளிகள்)

2. **அடிப்படைவிலை,உற்பத்தியாளரின் விலை மற்றும் கொள்வனவாளரின் விலை ஆகிய எண்ணக்கருக்களை உதாரணம் மூலம் விளக்குக?** (5புள்ளிகள்)

அடிப்படை விலை : உற்பத்தியாளர் பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்து விற்பனைக்கு தயாராக வைத்திருக்கும் நிலையில் அறவிடப்படும் விலைகளே அடிப்படை விலை ஆகும் அதாவது கொள்வனவாளரால் விற்பனையாளருக்குச் செலுத்தப்படும் விலை.

உற்பத்தியாளரின் விலை : உற்பத்தியின் மீது நேரடியாக அறவிடப்படும் வரிகள் அடிப்படை விலைகளுடன் கூட்டப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும் மானியங்களை அதிலிருந்து கழிப்பதன் மூலம் பெறப்படுவது

அல்லது உற்பத்தி செய்யுமிடத்திலிருந்து விற்பனையாளரை நோக்கிப் பொருள் செல்லும் போதுஉற்பத்தியாளரினால் உற்பத்தியாளர் விலையாகும்.

கொள்வனவாளரின் விலை :குறித்த பொருள் அல்லது சேவைக்காக நுகர்வோன் உண்மையில் செலுத்தும் விலையாகும். உற்த்தியாளனின் விலையுடன் போக்குவரத்துச் செலவு வணிக விளிம்பு மற்றும் நுகர்வோன் செலுத்த வேண்டியுள்ள வரிகள் என்பவற்றைக் கூட்டுவதன் மூலம் கொள்வன வாளர் விலையைப் பெறலாம்.

(விளக்கம் ஒவ்வொன்றிற்கும் ஒருபுள்ளி வீதம் 3X1=3 பொருத்தமான கற்பனையான உதாரணம் கொடுத்திருந்தால் 2 புள்ளி மொத்தம் 5புள்ளிகள்)

3. **முதனிலை வருமானங்கள் என்பதனை விளக்கி அதனுள் அடங்கும் பிரதான கூறுகள் எவையெனக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் அல்லது உற்பத்திக்குத் தேவையான ஒரு வளத்தை உரிமை கொண்டிருப்பதனால் நிறுவன அலகுகள் ஈட்டும் வருமானமாகும். (2புள்ளிகள்)

*. உழைப்பு வருமானங்கள்

*. தொழிற்பாட்டு மிகைகள்

*. கலப்பு வருமானங்கள்

*. உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான தேறிய வரிகள் (4X1/2 = 2புள்ளிகள்)

4. **இலங்கை தேசிய கணக்குகளைத் தொகுக்கும் செய்முறையை தரமுயர்த்தியத்திற்கமைய தேசிய கணக்குகளை தொகுப்பது தொடர்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களைக் குறிப்பிடுக?** (5புள்ளிகள்)

* அடியாண்டாக 2010 இனைத் திருத்துதல்

*. பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4இற்கமைவாக பொருளாதாரத்தின் அனைத்து நடவடிக்கை களையும் உள்ளடக்குவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கத்தினை விரிவாக்கல்

* புதிய துறைவாரியான வகைப்படுத்தலின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை வெளிப்படுத்தல்.

* செலவு அணுகுமுறையின் கீழ் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்

* உற்பத்தி மற்றும் செலவு அணுகுமுறைகளிற்கு ஒத்ததாக வருமான அணுகுமுறையின் கீழ் வருடாந்த மொ.உ.உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்

* அடிப்படை விலை எண்ணக்கருவினைப் பயன்படுத்தி உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொ.உ. உற்பத்தியினை மதிப்பீடு செய்தல் (5X1 = 5புள்ளிகள்)

5. **மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

* கொடுப்பனவு செய்யப்படாமல் வீட்டினுள் மேற்கொள்ளப்படும் வீட்டுச் சேவைகள்
* இலவசமாகக் கிடைக்கும் இயற்கை வளங்கள் நிலம்,நீர்,காற்று
* மனித உழைப்பின்றி வளரும் இயற்கை வளங்கள்
* கற்றல் மற்றும் ஓய்வு
* விலைமாற்றம் காரணமாக அல்லது இயற்கை வளர்ச்சி காரணமாக வளங்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள். (4X1 = 4புள்ளிகள்)

5. 1. ஏளிய பொருளாதாரம் ஒன்று சமநிலையில் உள்ளதாயின் சேமிப்பு அதன் முதலீட்டுக்குச் சமமாக கட்டாயம் இருத்தல் வேண்டும்.ஆனால் மூடிய பொருளாதாரம் ஒன்றின் சமநிலையின் போது சேமிப்பு கட்டாயம் முதலீட்டுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையல்ல விளக்குக (4புள்ளிகள்)

பொருளதாரம் ஒன்று சமநிலையிலுள்ளதாயின் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

* வருமானம் = செலவாகக் காணப்பட வேண்டும் Y=E
* உட்பாய்ச்சல் =வெளிப்பாய்ச்சல் Ij = W
* மொத்தக்கேள்வி = மொத்தநிரம்பல் (AD=AS)

எளிய பொருளாதாரத்தில் சேமிப்பு(S) ஆகிய வெளிப்பாய்ச்சல் மட்டும் உள்ள அதேசமயம் உட்பாய்ச்சலாக முதலீடு (I) மட்டும் உள்ளது.எனவே பொருளாதாரம் சமநிலை அடைய வேண்டுமானால் கட்டாயம் சேமிப்பு முதலீட்டிற்குச் சமமாகக் காணப்பட வேண்டும். மாறாக சேமிப்பு முதலீட்டிலும் அதிகமாகக் காணப்படுமானால் தேறிய உட்பாய்ச்சல் அதிகமாகி வருமான வட்டப்பாய்ச்சல் சமநிலை அடையாது. அதேபோல் சேமிப்பு முதலீட்டிலும் குறைவாகக் காணப்படுமானால் தேறிய வெளிப்பாய்ச்சல் அதிகமாகி வருமான வட்டப்பாய்ச்சல் சமநிலை அடையாது. எனவேதான் எளிய பொருளாதாரத்தில் சேமிப்பு(S) ஆகிய வெளிப்பாய்ச்சல் உட்பாய்ச்சலாக முதலீடு (I) க்குக் கட்டாயம் சமமாக வேண்டும். (2புள்ளிகள்)

மூடிய பொருளாதாரத்தில் சேமிப்பு, ,வரி (தேறியவரி) என்பன வெளிப்பாய்ச்சலாகக் காணப்படும் அதேவேளை முதலீடு அரச செலவீடு என்பன உட்பாய்ச்சல்களாகக் காணப்படும். எனவே உட்பாய்ச்சல் =வெளிப்பாய்ச்சல் முறையில் பொருளாதாரம் சமநிலை அடைவதற்கு வெளிப்பாய்ச்சல்களான சேமிப்பும், தேறியவரியும் இணைந்து உட்பாய்ச்சல்களான முதலீடு அரச செலவீட்டுக்கு சமமானால் போதுமானது மாறாக சேமிப்பு முதலீட்டுக்குச் சமமாகவே வரி அரச செலவீட்டுக்கு சமமாகவோ கட்டாயம் இருக்கவேண்டுமல்ல. (2புள்ளிகள்)

2. ஒரு மூடிய பொருளாதாரத்தின் வரிப் பெருக்கி −1.5 ஆகக் காணப்பட்டது இப் பொருளாதார த்தின் தன்னிச்சையான நுகர்வு 500 ஆகும். வருமானத்தால் தூண்டப்பட்ட முதலீடுகள் எதுவும் காணப்படவில்லை தன்னிச்சையான முதலீகள் காணப்படுகின்றது. இப் பொருளாதாரத்தில் வரி(T) 200 மில்லியனால் அதிகரிக்கும் அதேவேளை அரச செலவீடும்(G) 200 மில்லியனால் அதிகரிக் கின்றது எனின் சமநிலைத் தேசிய வருமானம் மாற்றமடையுமா? விளக்குக? (4புள்ளிகள்)

K(T) = -1.5
K(T) + K(y) = 1
-1.5+ K(y) =1
K(y) =2.5

K(y) =1/mps
2.5 =1/mps
mps= 0.4
mpc=1-0.4 =0.6

அல்லது

$K(T) = \frac{-mpc}{(1-mpc)} = -1.5 = \frac{-mpc}{(1-mpc)} = 0.6$

K(y) = 1/mps = 1 / 0.4 =2.5 தடவை (2புள்ளிகள்)

வருமான மாற்றம் = (வருமான பெருக்கி X அரசலெவு மாற்றம்) + (வரிப்பெருக்கி X வரிமாற்றம்)

= (2.5 X200) + (-1.5 X200)

= 500 -300 = 200 அதிகரிக்கும் (2புள்ளிகள்)

3. **எளிய பொருளாதாரம் ஒன்றின் வருமான வட்டப்பாய்ச்சல் ஒன்றை வரைந்து அதன் பணப்பாய்ச்ச ல்கள், மெய்ப்பாய்ச்சல்கள் என்பவற்றைக் குறித்துக்காட்டுக?** (4புள்ளிகள்)



(வட்டப்பாய்ச்சல் 2புள்ளி பணப்பாய்சல்,மெய்ப்பாய்சல் குறித்திருந்தால் 2 புள்ளி மொத்தம் 4புள்ளிகள்)

4. **பொருளாதாரத்தின் தனியார் நுகர்வுச் செலவினைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினையும், முதலீட்டுச் செலவினைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினையும் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

நுகர்வுச் செலவீட்டைத் தீர்மானிக்கும் காரணிகள்

* செலவிடக் கூடிய வருமானம்
* வீட்டுத்துறையிடம் உள்ள சொத்துக்கள்
* வரி அறவீடுகள்
* வீட்டுத்துறையிடமிருந்து பெறப்படும் கடன்கள் (2X1=2புள்ளிகள்)

முதலீட்டுச் செலவினத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்

- புதிய முதலீடுகளினால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களுக்கான கேள்வி
- வட்டிவீதம் - வர்த்தக சரிகள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள்
- வர்த்தக எதிர்பார்க்கைகள் (2X1=2புள்ளிகள்)

5. ஒரு எளிய பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகள் 1000 ஆகக் காணப்பட சமநிலைத் தேசிய வருமானம் 4000 ஆகக் காணப்பட்டது. இப் பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு 200 ஆகக் காணப்படுகின்றது இப்பொருளாதாரத்தில் தற்போது முதலீடு 100மில்லியனால் அதிகரிக்கின்றது. எனின்

(அ) **முதலீடு அதிகரித்த பின் சமநிலைத் தேசிய வருமானம் யாது?** (2புள்ளிகள்)

முதலீட்டு மாற்றம் X வருமானப் பெருக்கி = சமநிலைத்தேசிய வருமான மாற்றம் (1புள்ளி)

100 X 4 = 400

Y=4000 +400 =4400 (1புள்ளி)

(ஆ) **இப் பொருளாதாரத்தின் நுகர்வுச் சமன்பாட்டைத் தருக?** (2புள்ளிகள்)

K(y) = 1/ mps

4= 1/ mps   MPS= 0.25 , MPC =0.75   C= 200 +0.75y

(mpc மதிப்பீடு 1 சமன்பாடு 1)

உப பிரிவு (ஆ)

6. 1. **பணவீக்கம் என்றால் என்ன? இதன் பொருளியல் செலவுகள் நான்கைக் குறிப்பிடுக?**

(3புள்ளிகள்)

குறித்த பொருளாதாரத்தின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக நீண்ட காலப்பகுதியில் அதிகரித்தல் பணவீக்கமாகும் (1புள்ளி)

- பணத்தின் மெய்ப் பெறுமதி குறைவடையும்
- நிலையான வருமானம் பெறுவோர் பாதிப்படைவர்
- கடன்கொடுத்தோருக்கு தீமையாக அமையலாம்
- சேமிப்புக்கள் குறைவடைந்து முதலீடுகள் பாதிப்படைதல் (4X1/2=2புள்ளிகள்)

2. **தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்குமான ஒற்றுமைகள்,வேற்றுமைகளைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

- ஒற்றுமைகள் - இரண்டும் தற்போது ஒரே அடியாண்டில் மதிப்பிடப்படுகின்றது.(2013=100)
  - இரண்டும் விலைமட்ட மாற்றங்களைக் கண்டு கொள்வதற்குப் பயன்படுத்த கூடியது

(ஏதாவது ஒன்றிற்கு 1புள்ளி)

பிரமாணம்/அம்சம்	தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்	கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
புவியியல் உள்ளீடு மற்றும் குறிக்கப்பட்ட சனத்தொகை	இலங்கையின் அனைத்து மாகாணங்களின் அனைத்து குடியிருப்பாளர்களையும் உள்ளடக்கியது.	கொழும்பு மாவட்டத்தின் நகரப் பிரதேசங்களின் அனைத்து குடியிருப்பாளர்களையும் உள்ளடக்கியது.
அடிப்படைக் காலத்தில் மொத்தச் செலவீனம	தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பொருட்கள் மற்றும் சேவைகள் கூடையின் மாதாந்த மொத்தச் செலவீனமானது ரூ.32,142.69.	கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பொருட்கள் மற்றும் சேவைகள் கூடையின் மாதாந்த மொத்தச் செலவீனமானது ரூ.27,972.11.
நிறைக் கட்டமைப்பு	உணவுச் செலவினப் பங்கானது 44.04 சதவீதமாகும்.	உணவுச் செலவினப் பங்கானது 41.03 சதவீதமாகும்.
கணிப்பிடும் முறை	இரண்டாம் நிலை லக்ஸ்பியரின் சூத்திரம்	லக்ஸ்பியரின் சுட்டெண் சூத்திரம்.
விலைச் சேகரிப்பு	நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பொருட்களிற்கும் ஒவ்வொரு மாவட்ட நகரங்களிலும் 03 விலைச் சேகரிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன.	கொழும்பு நகர பிரதேசங்களை உள்ளடக்கி 14 விலைச் சேகரிப்பு நிலையங்கள்

(3 X1 =3புள்ளிகள்)

3. **பணநிரம்பல் என்றால் என்ன?இதற்கும் பணஅடித்தளத்திற்குமிடையேயான தொடர்பினை விளக்குக?** (4புள்ளிகள்)

ஏதாவது குறிப்பிட்ட நிலைமையொன்றின் போது பொதுமக்களிடையே புழக்கத்தில் உள்ள மொத்தப் பண அளவு பணநிரம்பல் அகும்.

இது ஒரு இருப்பு எண்ணக்கருவாகும். (1புள்ளி)

பண அடித்தளம் என்பது மத்திய வங்கியின் நேரடி நிதிப் பொறுப்புக்களாகும். பண நிரம்பலுக்கும் பண அடித்தளத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. (1புள்ளி)

பணநிரம்பல் = பணப்பெருக்கி X பணஅடித்தளம் (1புள்ளி)

எனவெ பணஅடித்தளம் அதிகரித்தால் பணநிரம்பல் அதிகரிக்கும் மாறாக பணஅடித்தளம் குறைவடைந்தால் பணநிரம்பல் குறைவடையும். இந்த வகையில் பண நிரம்பலுக்கும் பண அடித்தளத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. (1புள்ளி)

4. **இலங்கை மத்திய வங்கி பணக்கொள்கையினை செயற்படுத்துவதற்கான நோக்கத்தை குறிப்பிடுக?**

தொழிற்பாட்டு இலக்கு – சராசரி நிறையிடப்பட்ட அழைப்பு பணவீதம்

வெளிப்படுத்தும் இடைநிலை இலக்கு – விரிவாக்கிய பணநிரம்பல்

இறுதி இலக்கு – பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு (3X1 =3புள்ளிகள்)

5. **கற்பனையான வங்கிமுறைமை ஒன்றின் சட்டப்படியான ஒதுக்கு வீதம் 8% ஆகவும் வங்கிமுறைமைகளால் உருவாக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் 200,000 ரூபாவாகவும் வங்கிகள் வசமுள்ள மொத்த ஒதுக்குகள் 20,000 ரூபாவாகவும் காணப்பட்டது. பொதுமக்கள் வசமுள்ள நாணயம் 80,000 ரூபா எனவும் கருதுக.**

அ. **கடனாக்கப்பெருக்கியின் பெறுமதி யாது?** (2புள்ளிகள்)

$$\text{கடனாக்கப் பெருக்கி} = \frac{1}{\text{சட்டப்படியான ஒதுக்குவீதம்}}$$ (1புள்ளி)

= 1/ 8%

= 12.5 தடவைகள் (1புள்ளி)

ஆ. **வெளிநிற்கும் நாணயத்தின் அளவு எவ்வளவு?** (2புள்ளிகள்)

வெளிநிற்கும் நாணயம் = பொதுமக்கள் வசமுள்ள நாணயம் + வணிகவங்கிவசமுள்ள நாணயம் (1புள்ளி)

= 80,000 + 20,000 =100,000 ரூபா (1புள்ளி)

இ. **சட்டப்படியான ஒதுக்கு வீதத்திற்கமைய பூச்சியமிகை ஒதுக்கைப் பேணி இறுதிக்கடனாக்கச் செய்முறையில் வங்கிகள் ஈடுபடுகின்றன எனின் வங்கிமுறைமையின் சுருக்கிய ஐந்தொகையைத் தருக?** (2புள்ளிகள்)

ஐந்தொகை

வைப்பு	250000	ஒதுக்கு	20000
		கடன்	230000
	250000		250000

(2புள்ளி)

7. **சந்தைத் தோல்வி என்றால் என்ன? அது ஏற்படுவதற்கான பிரதான காரணங்களைப் பட்டியல்படுத்துக?**

சமூக நலனுக்காக அருமையான வளங்களை பங்கீடு செய்வதில் சந்தை பொறிமுறை தோல்வி தோல்வியடைதல் சந்தைத் தோல்வியாகும்

தன்னிச்சையாக செய்யப்படும் தெரிவுகள் **சமூகநலனுக்கு** எப்போதும் பங்களிப்புச் செய்வதில்லை இதன் போது வளங்களின் வினைத்திறனற்ற பங்கீடொன்று ஏற்படும் இதனால் சந்தை தோல்வியடையும்.

அல்லது

சமூகத்தின் மிகச்சிறந்த விருப்பத் தெரிவுகளுக் கேற்ப சந்தை சக்திகளுடாக வளங்களை ஒதுக் கீடு செய்வதில் சந்தைப் பொருளாதாரம் தோல்வியடைவதே **சந்தைத் தோல்வி** ஆகும்.

அல்லது

சந்தை சக்திகள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தவறுகின்ற சந்தர்ப்பம் சந்தைத் தோல்வி ஆகும்.

இங்கு சமூக நலனுக்காக அருமையான வளங்களை ஒதுக்கீடு(பங்கீடு)செய்வதில் சந்தைப் பொறி முறை தோல்வியடையும்.

சுயநன்மை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவுகள் / தன்னிச்சையாக செய்யப்படும் தெரிவுகள் சமூகத்தின் நன்மையினை எய்துவதன் பொருட்டு செயற்படுவதில்லை.

இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவுகள் சமூகத்தின் நன்மைக்கு எல்லாச் சந்தர்ப்பத்திலும் பங்களிப்புச் செய்வதில்லை. (வரைவிலக்கணம் 1புள்ளி)

*** வள ஒதுககீட்டில் செயற்திறனின்மை**

-பொதுப் பொருட்கள்

-வெளிவாரிகள்

-சமூக நலப் பொருட்கள்

-தீங்கு விளைவிக்கும் பொருட்கள்

-சந்தை சக்திகள்

-பூரணமற்ற தகவல்கள்ளளளள

-காரணி அசைவின்மை

-சந்தைகள் இல்லாமை

-அரசின் வரையறுத்த பங்களிப்பு

*** வள ஒதுக்கீட்டில் நியாயத்துவமின்மை**

-வருமான ஏற்றதாழ்வு

*** பேரினப் பொருளாதார உறுதியின்மை**

(பிரதான மூன்று காரணங்களையும் குறிப்பிட்டிருந்தால் 3X 1 =3புள்ளிகள் **அல்லது** ஏதாவது 6 காரணங்கள் குறிப்பிட்டால் 6 X 1/2 =3புள்ளிகள் வழங்கவும்.)

2. சந்தைப் பொருளதாரம் ஒன்றில் அரசின் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

* வளங்களை வினைத்திறனுடன் பங்கீடு செய்தல்

* வருமானம் மற்றும் சொத்து என்பவற்றிலை நியாயமான பங்கீடு

* சட்டங்களை ஆக்குதலும் நல்லாட்சியும்

* பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்

* கீழ்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் (4X 1 =4புள்ளிகள்)

3. **வரித்தாக்கம் என்றால் என்ன? இதனடிப்படையில் வரிகளின் பிரதான வகைகளைக் கூறிச் சுருக்கமாக விளக்குக**? (4புள்ளிகள்)

இறுதியாக வரியைத் தாங்குவது வரித்தாக்கமாகும் (1புள்ளி)

வரித்தாக்கத்தின் அடிப்படையில் நேர்வரிகள் ,மறைமுகவரிகள் என இரு பிரிவுகளாக பிரித்து நோக்கப்படும் (1புள்ளி)

வரிக்குட்படும் நபர் அல்லது நிறுவனத்தாலேயே அவ்வரி முழுவதும் செலுத்தப்படுமாயின் அது நேர்வரியாகும்.இது வருமானம் ,சொத்து,செல்வம் என்பவற்றின் மீது தங்கியுள்ளது. (1புள்ளி)

வரிசெலுத்துவோன் மீது வரிச்சுமையேற்றப்படாத இன்னொருவருக்கும் பெயர்க்கக் கூடிய வரிகள் மறைமுக வரிகள்ஆகும் .இது பொருட்கள் சேவைகளின்உற்பத்தி மற்றும் விநியோகத்தின் போது விதிக்ப்படலாம் (1புள்ளி)

4. இறை இடைவெளி என்றால் என்ன? இறை இடைவெளியின் முக்கிய தீர்மானக் காரணிகள் சிலவற்றைக் குறிப்பிடுக?

ஹெலர் (2005) இறை இடைவெளியை அதன் "நிதியியல் நிலைமையை அல்லது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கு நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை கட்டத்துக்குள்ளாகாதவாறு விருப்பமான நோக்கத்துக்காக மூலவளங்களை வழங்குவதற்கு அரசை அனுமதிக்கும் வரவுசெலவுத் திட்ட வாய்ப்பு என வரைவிலக்கணம் செய்கிறார்.

வேறு கருத்தில் கூறுவதாயின், இறை இடைவெளி என்பது, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மோசமாகப் பாதிக்காத விதத்தில், அரசின் செலவிடல், அரசிறை மற்றும் கடன்பாட்டுத் தேர்வுகள் தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு அரசுக்கு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு மேலதிக மூலவளங்களின் கிடைப்பனவைக் குறிக்கிறது. (2புள்ளிகள்)

இறை இடைவெளியின் முக்கிய தீர்மானக் காரணிகள்

- அரச செலவினத்தின் உள்ளடக்கம் மற்றும் போக்கு,
- வரிவிதிப்பதற்கான மனோபாவம்
- கடன்படுவதற்கான மனோபாவம்

-பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்குகிறது. (4X1/2=2புள்ளிகள்)

எனவே, இறை இடைவெளி அரசிறையை அதிகரிப்பதன் மூலம், செலவினத்தை அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பெறும் மூலவளங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்டு வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது. இறை இடைவெளியை உருவாக்கல் இறையின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையுடன் எந்தவிதத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. அரசு அதன் செலவின நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதன் படுகடனின் வட்டியைச் செலுத்துவதை நிதியிடுவதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் அதன் இயலளவைக் கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

5. **கடந்தகாலங்களில் இலங்கை அரசின் வரிவருமானங்கள் குறைவடைந்த நிலைமை காணப்பட்டது இலங்கை அரசின் வரிவருமானங்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் எவையெனக் குறிப்பிடுக?-**

- இலகுபடுத்தல்
- மறைமுக வரிப் பங்களிப்பைக் குறைத்து நேரடி வரிவிதிப்பு
- விலக்களிப்புக்களின் பரிகாரம்

-வரி நிருவாகம்

-வரித்தளத்தை விரிவாக்கல் மற்றும் வரிவீதங்களைக் குறைத்தலும் (4X1=4புள்ளிகள்)

8. 1. **இலங்கை நேபாளம் ஆகிய இரண்டு நாடுகள் உள்ளனவெனவும் அவை கார் ,வான் ஆகிய இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தும் ஊழியம் தொடர்பான அட்டவணை வருமாறு நாடுகள் தலா 2000 உள்ளீடுகளைக் கொண்டுள்ளன இவை தம்மிடம் உள்ள வளங்களைச் சரிசமமாகப் பங்கிட்டு உற்பத்தியில் ஈடுபட்டன எனவும் கருதுக.**

ஒரு பண்ட அலகினை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தும் ஊழிய அளவு

	கார்	வான்
இலங்கை	4	2
நேபாளம்	4	4

(அ) **சர்வதேச வர்த்தகம் ஒன்று இடம் பெற்றதாயின் நாடுகளிற்கிடையோன பரிமாற்று விகிதம் எவ்வாறு அமைந்திருக்கும்.?** (4புள்ளிகள்)

அமையச் செலவு மதிப்பீடு

கார் = $\frac{\text{வான்}}{\text{கார்}}$ இலங்கை $\frac{4}{2}$ = 2வான் நேபாளம் $\frac{4}{4}$ = 1வான்

வார் = $\frac{\text{கார்}}{\text{வான்}}$ இலங்கை $\frac{2}{4}$ = 0.5கார் நேபாளம் $\frac{4}{4}$ = 1கார்

(2 புள்ளிகள்)

ஒரு காருக்கு 1வானிலும் அதிகமாகவும் 2வானிலும் குறைவாகவும் பரிமாற்றம் இடம்பெற வேண்டும் அவ்வாறே ஒரு வானுக்கு 0.5 காரிலும் அதிகமாகவும் 1காரிலும் குறைவாகவும் பரிமாற்றம் இடம்பெற வேண்டும். (2 புள்ளிகள்)

(ஆ) **ஒப்பிட்டு நயக்கோட்பாட்டுக்கமைய சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடின் உலக உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு எவ்வளவு?** (4புள்ளிகள்)

சர்வதேச வர்த்தகத்திற்கு முன் உற்பத்தி

இலங்கை கார் 1000 / 4 = 250 நேபாளம் கார் 1000 / 4 = 250

வான் 1000/2 = <u>500</u> நேபாளம் வான் 1000 / 4 = <u>250</u>

750 500

உலகின் மொத்த உற்பத்தி 500 + 750 =1250 (2புள்ளிகள்)

சர்வதேச வர்த்தகத்தின் பின் இலங்கை வான் 2000 / 2 =1000

நேபாளம் கார் 2000 / 4 = <u>500</u>

1500 அலகுகள்

எனவே அதிகரிப்பு 1500-1250 = 250 அலகுகள் (2புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

2. **இலங்கையின் அண்மைக்கால ஏற்றுமதிக்கட்டமைப்பின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிக்குக?**

விவசாய ஏற்றுமதி வருவாய்களின் சார்பளவுப்பங்களிப்பு 1977 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

1977 மொத்த ஏற்றுமதி வருவாயில் 70%

2014 மொத்த ஏற்றுமதி வருவாயில் 25%

2015 மொத்த ஏற்றுமதி வருவாயில் புதிய மத்தியவங்கி ஆண்டறிக்கையை பார்க்கவும்

கைத்தொழில் ஏற்றுமதி வருவாய்களின் சார்பளவுப்பங்களிப்பு 1977 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

1977 மொத்த ஏற்றுமதி வருவாயில் 14%

2014 மொத்த ஏற்றுமதி வருவாயில் 74%

2015 மொத்த ஏற்றுமதி வருவாயில் புதிய மத்தியவங்கி ஆண்டறிக்கையை பார்க்கவும்

(4புள்ளிகள்)

3. **பெயரளவுப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் என்பவற்றை விளக்குக?** (4புள்ளிகள்)

பெயரளவுப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் வரைவிலக்கணம் 2புள்ளி

மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் வரைவிலக்கணம் 2புள்ளி

4. (அ) **சென்மதி நிலுவையின் 6ஆம் பதிப்புக்கமைய முதனிலை வருமானக் கணக்கு என்பதனுள் பதிவு செய்யப்படும் பிரதான இரு கொடுக்கல் வாங்கல்களையும் குறிப்பிடுக?**

ஊழியருக்கான இழப்பீடு

முதலீட்டு வருமானங்கள் (2X1= 2புள்ளிகள்)

(ஆ) **சென்மதி நிலுவையின் 6ஆம் பதிப்புக்கமைய திரண்ட நிலுவை எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது.?**

புதிய 6ஆம் பதிப்புக்கமைய கணக்குகள் பின்பற்றப்படும் இரட்டைப்பதிவுக்கு அமைய சென்மதி நிலுவை அட்டவணை சமப்படும் அவ்வாறு சமப்படாவிடின் பிழைகளும் தவிர்ப்புக்களின் ஊடாக சமப்படுத்தப்படும் எனவே தற்போது திரண்ட நிலுவை என்பது மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்(மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள்) திரண்ட நிலுவை மதிப்பீட்டுக்கு உதவுகின்றன.

அதாவது திரண்ட நிலுவை என்பது கால இறுதியில் உள்ள தேறிய அலுவல்சார் ஒதுக்கீட்டுக்கும் கால ஆரம்பத்திலுள்ள தேறிய அலுவல்சார் ஒதுக்கீட்டுக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

திரண்ட நிலுவை = கால இறுதியில் உள்ள தேறிய அலுவல்சார் ஒதுக்கீட்டு - கால ஆரம்பத்திலுள்ள தேறிய அலுவல்சார் ஒதுக்கீட்டு

(2புள்ளிகள்)

9. 1. **பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளைப் பட்டியல்படுத்துக?** (4புள்ளிகள்)

*வளக்கிடைப்பனவு / வளத்திரட்சி அதிகரித்தல்

- இயற்கை வளம் அதிகரித்தல்
- மனித மூலதனம் அதிகரித்தல்
- பௌதீக மூலதனம் அதிகரித்தல்
- சமூக மூலதனம் அதிகரித்தல்

*வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்
- தொழில்நுட்ப முன்னேற்றம்
- முகாமைத்துவ முன்னேற்றம்
- மனித மூலதன விருத்தி

*பேரினப் பொருளாதார உறுதிப்பாடு
* நல்லாட்சி
*அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடு
*அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரம் (4X1=4புள்ளிகள்)

2. **நீதிசார் பொருளாதாரவளர்ச்சி என்பதாற் கருதப்படுவது என்னவென்பதை விளக்குக?** (4புள்ளிகள்)

வருமான பங்கீட்டில் சமத்துவமின்மையினைக் குறைத்து வேலைவாய்ப்புக்களை உருவாக்கி மக்களின் வருமானத்தை அதிகரித்து வறுமையினை அகற்றக் கூடிய வகையிலான வளர்ச்சி நீதிசார்பொருளாதார வளர்ச்சி ஆகும். (2புள்ளிகள்)

நீதிசார் பொருளாதார வளர்ச்சி பின்வரும் மூன்று தன்மைகளைக் கொண்டது.

- வருமானப்பங்கீட்டிலான சமத்துவமின்மையினை குறைக்கும் வகையிலான பொருளாதார வளர்ச்சி
- வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தும் வகையிலான பொருளாதார வளர்ச்சி
- வறுமையினை அகற்றக் கூடிய வகையிலான பொருளாதார வளர்ச்சி

இவ்வகையில் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் மேலிருந்து கீழ்நோக்கிப் பாய்ந்து சென்று தொழிலின்மை குறைத்தல் வறுமை குறைத்தல் ,வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல் வேண்டும்.

(2புள்ளிகள்)

3. **பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையானது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும் விளக்குக?** (4புள்ளிகள்)

பொளாதார அபிவிருத்தியென்பது மனித வாழ்க்கையின் பொருளாதார நிலையினையும் அதன் தரத்தினையும் உயர்வடையச் செய்யும் அதேவேளை அது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும் (1புள்ளி)

இதற்கான காரணங்கள்
.- பொருளாதாரத்தின் உற்பத்தித்துறையில் கட்டமைப்பு மாற்றம்
- உற்பத்தி வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்
- உற்பத்திச் செய்முறைகள் மற்றும் தொழில்நுட்ப் முன்னேற்றமடைதல்
- புத்துருவாக்கமும் நவீன மயப்படுத்தலும் ஏற்படல்
- பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் மேலிருந்து கீழ்நோக்கிப் பாய்ந்து சென்று தொழிலின்மை குறைத்தல் வறுமை குறைத்தல் போன்றவற்றைப் பூத்தி செய்ய வேண்டியுள்ளதால் இது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும் (3 X 1= 3புள்ளிகள்)

4.(அ) **அண்மைக்கால நிலைத்திருக்கும் அபிவிருத்திக்குறிக்கோள் ஐந்து பிரதான விடயங்கள் சார்பாக கவனம் செலுத்துகின்றன அவற்றுள் நான்கைக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)**

மக்கள்
கோள்
சுபீட்சம்
பங்குடமை
சமாதானம் (4 X ½= 2புள்ளிகள்)

(ஆ) **நிலைத்திருக்கும் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு அவசியமான நால்வகை மூலதனங்களும் எவையெனக் குறிப்பிடுக?** (2புள்ளிகள்)

சமூக மூலதனம்

பௌதீக மூலதனம்

இயற்கை மூலதனம்

மனித மூலதனம் (4 X ½= 2புள்ளிகள்)

5.**அபிருத்திக்கான குறிகாட்டி என்ற வகையில் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின் வரையறைகளைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

- இது ஒரு மொத்தக் குறிகாட்டி ஆகையால் நாடுகளின் உள்ளகத்தே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை இதன் மூலம் இனங்கான முடியாது.
- மனித அபிவிருத்தியின் எல்லா அம்சங்களும் இக்குறிகாட்டியில் உள்ளடக்கப்படவில்லை
- இச்சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா விடயங்களும் சமமான நிறையிடப்பட்டுள்ளது.
- தரத்தில் ஏற்படும் வேறுபாடுகளை இச்சுட்டெண் கருத்தில் கொள்வதில்லை
- கல்வியை அளவீடு செய்வதில் ஆரம்பக் கல்வியில் இணையும் மாணவர்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது.இடைவிலகல் தொகையினை இது கருத்தில் கொள்ளவில்லை.
- அபிவிருத்தியின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் சுற்றாடல் அம்சங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை
- இதன் உள்ளடக்கத்தின் சார்பு முக்கியத்துவத்தை அளவிடக்கூடியதாக இல்லை.

(4 X1 = 4புள்ளிகள்)

10. 1. **வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு மேறகொண்ட நடவடிக்கைகள் எவை?** (4புள்ளிகள்)

- கிராமிய வறுமைக்குத் தீர்வாக சமுர்த்திக் கொடுப்பனவை அதிகரித்தல்முயற்சியான்மை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துவதற்காக ஜனபுபுதுவ ,கம்திரிய,ஏக கம்மான என்பன நடைமுறைப்படுத்தல்.
- கிராமிய பொதுவசதிகளை மேம்படுத்துவதற்காக மகநெகும,கமநெகும,கமிபுபுதுவ மற்றும் கிராமிய மின்திட்டங்கள் குடிநீர்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.
- பிரதேச அபிருத்தித் திட்டங்கள் என்ற வகையில ரஜரட்ட ,நவோதய,புபுதுமு ,வெல்லலஸ்ஸ ,செங்கடகல,உதானய,வடக்கு கிழக்கு அபிவிருத்தி போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்ப டுத்தப்படல்
- விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு உரமானியத்தைப் பெற்றுக் கொடுத்தல்
- செறிவான மற்றும் நடுத்தர அளவுக் கைத் தொழில்களை முன்னேற்றுவதற்கு நாடு முழுவதிலும் 300 கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல்
- உயர்கல்வி மற்றும் வசதிகள் தொடர்பாக ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக கிராமத்திற்குத் தொழில்நுட்பத்தைக் கொண்டுவருகின்ற விஞ்ஞான தொழில்நுட்ப வளநிலையங்களை உருவாக்கல்.

(4 X1 = 4புள்ளிகள்)

2. **இலங்கையில் ஏற்பட்டு வரும் குடித்தொகை நிலைமாற்றத்தின் முக்கிய பொருளாதார விளைவுகள் எவை?** (4புள்ளிகள்)

* தொழில்வழங்குநர் மீதான ஓய்வூதிய நன்மைகளின் சுமை அதிகமாகும்.
* வயோதிப சனத்தைகையைப் பராமரிக்க அரசாங்கம் அதிகளவு செலவினங்களைச் செய்ய நேரிடும்.
* முதியோர் தமது கடந்த கால சேமிப்புக்களைப் பயன்படுத்தி நுகர்வினை மேற்கொள்ள நேரிட்டால் உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறைவடையும்.
* தங்கியிருப்போர் வீதம் அதிகரித்து நாட்டின் தொழில்புரியும் சனத்தொகையின் மீது அழுத்தம்

அதிகரிக்கும்.இதுவும் நாட்டின் சேமிப்பு வீதம் குறைவடைய வழிவகுக்கும்

*கருவளவீதம் குறைவடைதல் ஒழியப்படையில் வீழ்ச்சியை ஏற்பத்தி ஊழியப்படையை பாதிப்பதுடன் பொருளாதாரத்திற்கும் பாதகமாக அமையும்.

* 15 வயதிற்குட்பட்ட சனத்தொகை வீழ்ச்சியடைவதனால் கல்வியின் மீதான பௌதீக உட்கட்டமைப்பு தேவைப்படா.எனவே அதனைக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தப் பயன்படுத்தலாம்.

(4 X1 = 4புள்ளிகள்)

3. **உராய்வு வேலையின்மை,அமைப்புரீதியான வேலையின்மை ஆகியவற்றை விளக்குக.** (4புள்ளிகள்)

உராய்வு வேலையின்மை வரைவிலக்கணம் 2புள்ளி

அமைப்புரீதியான வேலையின்மை வரைவிலக்கணம் 2புள்ளி

4. **இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் பிராந்திய ரீதியான சமமின்மையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைளைக் குறிப்பிடுக?** (4புள்ளிகள்)

* கிராம மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்தல் “மகநெகும” “கம நெகும” கிராம மின் விநியோகம்.
* தோட்டச் செய்கை தவிர்ந்த விவசாயத்துறையினை விருத்தி செய்தல்.
* பிராந்திய கைத்தொழில் மயமாக்கல் திட்டம்.பொழும்பு,கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 300 தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்
* சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகள் வங்கியை தாபித்தல்
* உயர்கல்வி வழங்குவதில் பிராந்திய சமத்துவத்துவத்தை பேணும் நோக்கில் 2005 ஆம் ஆண்டில் ஊவாவெலல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தமை
* மாகாண மட்டத்திலான அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை
* நுண்கடன் வழங்கும் வசதிகளை பலப்படுத்திமை.

(4 X1 = 4புள்ளிகள்)

5. **இலங்கையில் பெண்தொழிற்படைப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் பெண்தொழிலின்மையைக் குறைப்பதற்கும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை?** (4புள்ளிகள்)

*. பகுதிநேரத்தொழில்களை வசதிப்படுத்துவதற்கு தொழிலாளர் சட்டங்களைத் தளர்த்துதல்

*. நெகிழ்ச்சித்தன்மையான வேலை மணித்தியாலங்களை அறிமுகப்படுத்தல்

* வீட்டுத்தெரிவு மற்றம் சுயதொழில் ஆகியவறிற்கான வேலைகளைப் பிரபல்யப்படுத்தல்
* சிறுவர் பராமரிப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தல்
* சிறிய கால இடைவெளிக்கு பின் வேலை செய்ய விரும்பும் பெண்களுக்கு மீள்திறனூட்டல்,மீள்ப்பயிற்சியளித்தல்
* பிரதான நகரங்களில் தனிமைப்பட்டிருக்காது நிறுவனங்கள் தங்கள் செயற்பாடுகளை பிராந்திய மயப்படுத்தல். (4 X1 = 4புள்ளிகள்)

18.05.2017 **வடமாகாணக் கல்வித் திணைக்களம்**